இணைப்பு

1975 எப்ரல் 5]

[20-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

1966-ல் இந்திய அரசால் அமைக்கப்பட்ட மின்சார நிறுவனங்களுக்கான மத்திய ஊதியக்குழு, மின்சாரத்துறைத் தொழிலாளர்களின் ஊதியங்கள் முதலியவற்றை மாற்றியமைப்பது குறித்த தனது பரிவுரைகளை 1969 டிசம்பர் திங்களில் அளித்தது. தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக்கொண்டதன் பேரில், தமிழ்நாட்டிலுள்ள மின்சார வாரியத் தொழிலாளர்களின் ஊதியங்களை மாற்றியமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் 1970 மார்ச் திங்களில் தொடங்கியது. 1—12—1969-லிருந்து ஊதியங்களை மாற்றியமைப்பது குறித்த ஆணைகள், 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் ஊதிய வீதங்கள், அகவிலைப்படி அமைப்புமுறை, வீட்டு வாடகைப்படி ஆகியவை குறித்து தொழிலாளர் சங்கங்களுடன் உடன்பாடு ஏற்பட்ட பின்னர், 1970 மே திங்களில் பிறப்பிக்கப்பட்டன. மேற்சொன்ன உடன்பாடு 1—12—1969-லிருந்து 5 ஆண்டுகளுக்குச் செயலில் இருந்துவந்தது. ஊதியக்குழுவின் பரிவுரைகளை இந்திய அரசு 1970 ஜூலைத் திங்களில்தான் ஏற்றுக்கொண்டது. ஆனால், மத்திய ஊதியக்குழுவின் பரிவுரைகளை இந்திய அரசு ஏற்றுக் கொள்வதற்குக் காத்திராமலேயே மாநில அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டது.

2. ஊதியங்கள் மேற்சொன்னவாறு மாற்றியமைக்கப்பட்ட பின்னர், மாநில அரசு மாநில அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கீழ்க்காணும் சலுகைகளைத் தமது தொழிலாளர்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் பரிவுடனும் நல்லெண்ணத்திற்கு அடையாளமாகவும் வழங்கியுள்ளது :—

(1) ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியிலுள்ள தொழிலாளர்களுக்கு ரூ. 2,000 திருமண முன்பணம் அளித்தல் ;

(2) அகவிலைப்படியில் பாதியைக் கருத்திற்கொண்டு அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் வீதங்களுக்குச் சமமாக நகர ஈட்டுப்படி வழங்குதல் ;

(3) ரூபாய் 1,000 வரை சம்பளம் பெறும் I-வது II-வது வகுப்பு அதிகாரிகள் உட்பட பணியாளர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் 12 சதவீதமும், அகவிலைப்படியில் 50 சதவீதமும் சேர்த்து ரூ. 80 என்ற பேரளவு வீதத்திற்குட்பட்டு 1—6—1971-லிருந்து மலைவாழ் இடப்படி ;